**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

-

**எம். சி.ஓ.பி.எண்.441/2019** **நாள். 23.02.2024**

2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | ராஜேந்திரன் | சாதி | |
| கிராமம் | பெரியநொளம்பை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 33 |

**ம..சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-1ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 1 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. ம.த.சா.ஆ.1 - அண்ணா சதுக்கம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல்.
2. ம.த.சா.ஆ.2 - சென்னை ராஜுவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவஆவணம் அசல்.
3. ம.த.சா.ஆ. 3 -மனுதாரரின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது)

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**